பக்கங்கள்:-17

# காலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவர் ஆண்டு 2057 | ஆடி 30 | வெள்ளிக்கிழமை | 15.08.2025 | அதிர்வு 14

## ஈஸ்டர் தாக்குதலின் பிரதான சூத்திரதாரியை பாதுகாக்க எதிரணி முயற்சி



### அநுர அரசு குற்றச்சாட்டு

“உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலுடன் தொடர்புடைய விசாரணைகளை இருட்டடிப்புச் செய்து, பிரதான சூத்திரதாரியைப் பாதுகாக்கும் தேவைப்பாடு சஜித்

06

## ராஜபக்‌ஷ குடும்பத்தைப் போல்

# அநுர அணியும் வெகுவிரைவில் விரட்டியடிக்கப்படும்

பொய்களைக் கூறி ஆட்சி செய்த ராஜபக்‌ஷ குடும்பத்தைப் போல் தற்போது பொய்களாலேயே ஆட்சி செய்யும் அநுர அணியும் மிக விரைவில் வீட்டுக்கு விரட்டியடிக் கப்படும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப் பினர் காவிந்த ஜயவர்தன தெரி வித்தார்.

06



# நம்பிக்கையில்லாப் பிரேரணையை தமிழரசு எம்.பிக்கள் ஆதரிப்பார்களா?

## ஸ்ரீநேசன் எம்.பி. விளக்கம்

(கனகராசா சரவணன்)

“தற்போதைய பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அருண ஜயசேகர, கிழக்கு மாகாணத்தில் இராணுவத் தளபதியாக இருந்தபோது தமிழ் மக்களுக்கு எதிரான மனித உரிமை மீறல்கள் மற்றும் உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலுடன் தொடர்பு பட்டிருப்பதாக எமது கட்சி ஆய்வின்படி நிரூபிக்கப்படுமாக இருந்தால் அவருக்கு எதிராகக் கொண்டுவரப்பட்டுள்ள நம்பிக் கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிப்போம்.”

– இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற

06






ஊருக்கடி உபதேசம், உனக்கு இல்லையடி..!’ என்பார்கள்.

எதிர்க்கட்சி வரிசையில் இருந்தபோது, அவ் வப்போதைய ஆளும் தரப்புக்கு எதிராக தேசிய மக்கள் சக்தியினர் பண்ணிய ஆரவாரம் – அடுக் கிய குற்றச்சாட்டுகள் – போன்றவை இப்போது தாங்கள் அதிகாரத்துக்கு வந்ததும் அவர்களுக்கு மறந்து விட்டது போலும்.

ஏனெனில் அப்போது அந்தந்த ஆட்சியா ளர்கள் மீது என்னென்ன குற்றச்சாட்டுகளை முன் வைத்தார்களோ அந்த வேலைகளை அவர்கள் இப்போது செய்கிறார்கள். எதிர்க்கட்சியில் இருந்த போது தாங்கள் சொன்ன உபதேசங்கள் ஊருக்கு, இப்போது தங்களுக்கு அல்ல...! – என்பதுதான் அவர்களது நிலைப்பாடு போலும்.

அண்மையில் நடந்த சம்பவம் ஒன்று இது.

கடற்றொழில், நீரியல் வளத் திணைக்களத் தின் பணிப்பாளர் நாயகத்தினால் முல்லைதீவு, யாழ்ப்பாண மாவட்ட உதவி பணிப்பாளர்கள் நியமனம் அதிரடியாக முன் எடுக்கப்பட்டது.

06




800 ஏக்கர் விவசாயக் காணிகள் சூறையாடப்படுவதை நிறுத்துமாறு கோரி

# திருகோணமலை – முத்துநகர் பிரதேச மக்கள் நேற்று ஜனாதிபதி செயலகத்தின் முன் பெரும் போராட்டம்!

திருகோணமலை, முத்துநகர் பிரதேச மக்கள் நேற்று வியாழக்கிழமை கொழும்பில் ஜனாதிபதி செயலகத்தின் முன்பாகப் பெரும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

முத்துநகரில் 800 ஏக்கர் விவசாயக்காணிகள் சூறையாடப்படுவதைநிறுத்துமாறு கோரியே அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

“இந்தியக் கம்பனிகளின் காணி மற்றும் வளத் திருட்டுக்கு எதிரான போராட்டத்தைத் தொடங்குவோம்” என்ற பதாதையையும் ஏந்தியவாறு அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.













# நான்கு தசாப்தங்களுக்கு பின்னர் திருத்தப்படும் நாடாளுமன்றம்

நான்கு தசாப்தங்களுக்கு பின்னர் இலங்கை நாடாளு மன்றத்தில் பாரிய அளவிலான திருத்தப் பணிகள் ஆரம் பிக்கப்பட்டுள்ளன.

இலங்கை இராணுவத்தின் ஒத்துழைப்புடன் திருத்தப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அமைச்சரவையின் அனுமதியுடன், சபாநாயகர் ஜகத் விக்ரமரதனவின் அறிவுறுத்தல்களுக்கு அமைய, நாடாளுமன்ற கட்டடத்தில் பாரிய திருத்தப் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.












# மன்னார் போராட்டத்தை கை விடுவதா? இல்லையா? போராட்டக்காரர்களுடன் கலந்துரையாடியே முடிவு!

## பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை மார்க்கஸ் அடிகளார் தெரிவிப்பு

(எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னாரில் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற போராட்டத்தைத் தொடர்ந்து நடத்துவதா? அல்லது தற்காலிகமாக கைவிடுவதா? - என்பது குறித்து போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றவர்களுடன் கலந்துரையாடி முடிவு எடுக்கப்படும் என மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை மார்க்கஸ் அடிகளார் தெரிவித்தார்.

இந்தப் போராட்டத்தை குறித்த காலப்பகுதிக்குள் கைவிடுமாறு கோரி அரசாங்க அதிபரினால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு பதில் வழங்கும் வகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

மன்னாரில் இரண்டாம் கட்ட காற்றாலை அமைத்தல் மற்றும் கனிய மண் அகழ்வை முற்றிலும் நிறுத்தக் கோரி மன்னார்த் தீவு மக்கள் சுழற்சி முறையில் தொடர் போராட்டம் நடைபெற்று வருகின்றது.

இந்நிலையில், மன்னார் மக்கள் சார்பாக ஐந்து பிரதிநிதிகள் கொண்ட குழுவினர் நேற்று முன்தினம் ஜனாதிபதியை சந்தித்து கலந்துரையாடினர்.

இவ்விசேட சந்திப்பின் உத்தியோபூர்வ கடிதம் நேற்று மாலை மன்னார் பிரஜைகள் குழு தலைவரிடம் மன்னார் அரசாங்க அதிபர் கையளித்தார்.

காற்றாலை மின்சாரம், கனிய மணல் அகழ்வை நிறுத்தக் கோரி தொடர் போராட்டம் மன்னார் நகர மத்திய சுற்று வட்ட பிரதான வீதி பகுதியில் 12 ஆவது நாளாக நேற்றும் முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் போராட்டம் தொடர்பில் நேற்று முன்தினம் பிற்பகல் ஜனாதிபதியுடனான கூட்டத்தில் தற்காலிகமாக ஒரு மாத காலம் நிறுத்தி வைப்பதுடன், அந்தக் காலத்தில் திட்டம் தொடர்பில் சாதகமான மற்றும் பாதகமான அறிக்கையொன்றை தயாரிப்பதற்கு மக்களின் கருத்துக்களை கேட்டு அறிவதற்குமான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

இந்தத் தீர்மானம் தொடர்பான உத்தியோகபூர்வ கடிதம் எரிசக்தி அமைச்சின் ஊடாக நேற்று மன்னார் மாவட்ட அரசாங்க அதிபருக்கு கிடைக்கப்பெற்ற நிலையில் அந்தக் கடிதத்தை நேற்றுப் பிற்பகல் சுமார் 5. 50 மணி அளவில் போராட்டத்தை முன்னெடுத்த மக்கள் பிரதிநிதிகள், மற்றும் மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை எஸ். மாக்கஸ் அடிகளாரிடம் அரச அதிபர் கையளித்தார்.

அந்தக் கடிதத்தை பெற்றுக் கொண்ட மார்க்கஸ் அடிகளார் போராட்டத்தைக் கைவிடுவது குறித்து மக்கள் பிரதிநிதிகளிடம் கலந்தாலோசித்து உத்தியோகபூர்வமாக அறிவிப்பார் எனத் தெரிவித்தார்.

# வவுனியாவில் இருந்து நல்லூருக்கு யாத்திரை




(கி.வசந்தன்)

வவுனியா வேப்பங்குளம் காளி கோவிலில் இருந்து நல்லூர்க் கந்தசாமி கோவிலை நோக்கி பாதயாத்திரை நேற்று ஆரம்பமானது.

வருடாந்தம் நல்லூர் உற்சவ காலத்தில் இந்தப் பாதயாத்திரை ஆலயத்தின் தர்மகர்த்தா சாமி அம்மா தலைமையில் இடம்பெற்று வருகின்றது .

நேற்று 14 ஆம் திகதி ஆரம்பமான பாதயாத்திரை நல்லூர் கந்தசாமி கோவிலின் தேர் திருவிழா அன்று நல்லூரைச் சென்றடையும்.

நேற்றுக் காலை கோவிலில் விசேட பூஜைகள் இடம் பெற்றதன் பின்னர் பக்தர்கள் புடைசூழ வவுனியாவில் உள்ள பல வேறு ஆலயங்களையும் தரிசித்து பாத யாத்திரை ஆரம்பமாகியது.



# செஞ்சோலை படுகொலையின் நினைவேந்தல் வவுனியாவிலும்

(கி.வசந்தன்)

தமிழர் தாயகக் காணாமல் ஆக்கப்பட்ட சங்கத்தால் செஞ்சோலையில் படுகொலை செய்யப்பட்ட உறவுகளுக்கான 19 ஆவது ஆண்டு அஞ்சலி நிகழ்வு தமிழர் தாயகக் காணாமல் ஆக்கப்பட்ட சங்கத்தின் ஏற்பாட்டில் நேற்று இடம் பெற்றது.

வவுனியா வீதி அபிவிருத்தி திணைக்களத்திற்கு முன்பாக கடந்த 3,098 நாள்களாக போராட்டம் மேற்கொள்ளும் பந்தலில் இந்த அஞ்சலி நிகழ்வு அனுஷ்டிக்கப்பட்டது.

இதன்போது உயிரிழந்தவர்களின் நினைவாக அக வணக்கம் செலுத்தப்பட்டு மலரஞ்சலி செய்யப்பட்டது.

நிகழ்வில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் கலந்துகொண்டிருந்தனர்.









## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சம்பந்தப்பட்ட தரப்புக்களின் கலந்தாய்வு இல்லாமல், உடனடியாக நடைமுறைக்கு வரும் என அந்த இடமாற்ற உத்தரவு வழங்கப்பட்டது. உத்தரவுக்கு இலக்கான யாழ்ப்பாண மாவட்ட உதவிப் பணிப்பாளர் சேவையில் மூத்தவர். அவரிடம் ஒப்புதல் கேட்காமலேயே வலுக்கட்டாயமாக இந்த இடமாற்ற நியமனங்கள் நடைபெற்றமையால் இப்போது விவகாரம் மேன்முறையீடு வரைச் சென்றுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் உதவி பணிப்பாளராக இருப்பவரை இடமாற்ற வேண்டும் அல்லது பதவி இறக்க வேண்டும் என்ற நோக்கம் அரசியல் தலைமைகளுக்கு இருந்ததால்தான் இந்த இடமாற்றங்கள் அவசரமாக முன்னெடுக்கப்பட்டன என்று உள்வீட்டுத் தகவல்கள் கூறுகின்றன. ஆளுநரப்பினர் சொல்லுகின்ற விடயங்களை ஏற்காமல் – கேட்காமல் – சட்டதிட்டங்களின்படி அவர் இறுக்கமாக நடக்கின்றமையால் தான் அவருக்கு இந்த இடம்மாற்றத் தூக்கியடிப்பு....!

ஆனால், விவகாரம் விஸ்வரூபம் எடுக்கும் சூழல் தென்படுவதால், இந்த இடமாற்று அறிவித்தல்கள் இப்போது இடைநிறுத்தப்பட்டுள்ளன எனத் தெரிகிறது.

இதேநேரம் கடற்றொழில், நீரியல் வளத் திணைக்களத்தில் இடம்பெறும் மேலும் சில சம்பவங்கள் உள்ளன.

ஜனாதிபதியின் யாழ்ப்பாணம் வருகைக்காக மயிலிட்டியில் நிற்கும் இந்தியப் படகுகளை அறுத்து, நொறுக்கி, துண்டு துண்டாக்கி, ஏற்றிச் சென்று மறைக்க கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களம் மாவட்ட அரச அதிபரிடம் இடம்கோரி கடிதம் எழுதியமை தொடர்பில் ஏற்கனவே செய்தி வெளிவந்துள்ளது.

தற்போது மன்னார் மாவட்டத்தில் பிடிபட்டு நிறுத்தப்பட்டுள்ள இந்தியப் படகுகளில், இரணைதீவில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் 20 படகுகளை அகற்ற நீதிமன்ற அனுமதியை பெற்றுத் தருமாறு கடற்படை, மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்களத்திற்கு கடிதம் அனுப்பியுள்ளது.

இலங்கையில் பிடிபட்டு பறிமுதல் செய்யப்பட்ட படகுகளை மீட்டுத் தருமாறு தமிழகத்தில் மீனவர்கள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் காலத்தில் இந்தச் செய்திகளும் வெளி வருகின்றன.

+ + +

முதலீட்டு சபையின் கண்காணிப்பின் கீழ் ஏழு வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இலங்கையில் கஞ்சா பயிரிட அனுமதிக்கும் அரசாங்கத்தின் முடிவு குறித்து மது மற்றும் போதைப்பொருள் பற்றிய தகவல் மையம் கடுமையான கவலைகளை வெளிப்படுத்தியுள்ளது.

கடுமையான் பாதுகாப்பு நடவடிக்கைகளுடன், ஏற்றுமதி நோக்கங்களுக்காக மட்டுமே கஞ்சா சாகுபடி செய்யப்படும் என்று அமைச்சர் நளிந்த ஜெயதிஸ்ஸ நேற்று முன்தினம் அறிவித்தார். கஞ்சா செடியின் அனைத்து பகுதிகளையும் பயன்படுத்துவதன் மூலம் பொருளாதார நன்மைகளை உருவாக்குவதே இதன் நோக்கம் என்று அவர் கூறினார்.

இலங்கை மருத்துவ சங்கம், மனநல மருத்துவர்கள் கல்லூரி, சமூக மருத்துவர்கள் கல்லூரி மற்றும் பரந்த பொது மக்களின் கடுமையான எதிர்ப்பைத் தொடர்ந்தே இதேபோன்ற ஒரு திட்டம் முன்னர் நிராகரிக்கப்பட்டதை மது மற்றும் போதைப்பொருள் பற்றிய தகவல் மையத்தின் நிர்வாக இயக்குனர் சம்பத் டி சேரம் நினைவு கூர்ந்தார்.

எதிர்க்கட்சியில் இருந்தபோது இந்த திட்டத்தை எதிர்த்த தற்போதைய முதலீட்டு ஊக்குவிப்பு துணை அமைச்சர், இப்போது தனது புதிய பதவியில் அதை ஊக்குவித்து வருகிறார் எனவும் அவர் குறிப்பிட்டார்.

கஞ்சாவை சட்டப்பூர்வமாக்குவதற்கான உலகளாவிய நடவடிக்கைகள் இருந்தபோதிலும், இதுபோன்ற பல முயற்சிகள் வலுவான எதிர்ப்பு மற்றும் நிபுணர்களின் கவலைகள் காரணமாக தோல்வியடைந்துள்ளன என்று மது மற்றும் போதைப்பொருள் பற்றிய தகவல் மையம் எச்சரித்தது. சர்வதேச கஞ்சா சந்தை உண்மையான வளர்ச்சியைக் காட்டவில்லை என்றும், அதிகப்படியான விநியோகம் மற்றும் குறைந்த இலாப சாத்தியக்கூறுகளே இருப்பதாகவும் அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர்.

இந்த நடவடிக்கை இலங்கையின் பொது ஆரோக்கியத்திற்கு கடுமையான ஆபத்துகளை ஏற்படுத்துகிறது என்றும் அவர்கள் எச்சரித்தனர்.

## ஈஸ்டர் தாக்குதலின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அணிக்கும் உள்ளது என்பதையே பிரதிப் பாதுகாப்பு அமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை வெளிப்படுத்துகின்றது." – என்று அநுர அரசு அறிவித்துள்ளது.

பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அருண ஜயசேகரவுக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தியால் முன்வைக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பில் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ ஊடகங்களிடம் தெரிவித்ததாவது:–

"உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் முறையாக இடம்பெற்று வரும் விசாரணையை மூடிமறைக்கும் நோக்கில் எதிரணிகளால் பெரும் சதித்திட்டம் தீட்டப்படுகின்றது. இந்தச் சதிகளில் அரசு சிக்காது.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம் தொடர்பான விசாரணைகள் முறையாக இடம்பெறாத வேளை, அருண ஜயசேகரவின் (தற்போதைய பிரதிப் பாதுகாப்பு அமைச்சர்) பெயர் சஜித் தரப்புக்கு நினைவுக்கு வரவில்லை. நாடாளுமன்றத் தெரிவுக்குழு மற்றும் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு என்பவற்றில்கூட இவரின் பெயரைக் குறிப்பிடவில்லை.

தற்போது அவரின் பெயர் திடீரென நினைவுக்கு வந்துள்ளது ஏன்?

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர் உரிய வகையில் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். இந்தநிலையில் அரசுடன் தொடர்புபட்ட ஒருவரை இதனுடன் சஜித் தரப்பு தொடர்புபடுத்த முற்படுவது ஏன்?

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவத்தின் பிரதான சூத்திரதாரி மற்றும் உண்மையான குற்றவாளிகளை மூடிமறைக்கும் தேவைப்பாடு எதிரணிக்கு இருப்பது இதன்மூலம் தெரிகின்றது." – என்றார்.

## நம்பிக்கையில்லாப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உறுப்பினர் ஞானமுத்து ஸ்ரீநேசன் தெரிவித்தார்.

"பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அருண ஜயசேகரவுக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தி கொண்டுவந்துள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையை இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆதரிப்பார்களா? இல்லையா?" என்று வினவியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

## அநுர அணியும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

"கடந்த 10 மாதங்களாகப் பொய்களாலேயே தேசிய மக்கள் சக்தி நாட்டை ஆட்சி செய்து கொண்டிருக்கின்றது. இதற்கு மத்தியில் தற்போது தேசிய மக்கள் சக்திக்கும் ஜே.வி.பி.க்கு இடையில் கடுமையான முரண்பாடுகள் தோற்றம் பெற்றுள்ளன.

சிச்சியின் செய்மதி விவகாரத்தில் பிரதமர் ஹரிணி அமரசூரியவும் அமைச்சர் வசந்த சமரசிங்கவும் முரண்பட்ட கருத்துக்களைக் கூறியதால் அவை பகிரங்கமாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

இது சமூகத்தில் பாரிய சர்ச்சையைத் தோற்றுவித்துள்ளதால் முதலீட்டு சபையின் அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவுள்ளதாக வசந்த சமரசிங்க குறிப்பிட்டுள்ளார்.

அந்த அதிகாரிகள் தவறான தகவலை வழங்கியிருந்தாலும் பிரதமரே சரியான தகவல் எது என்பதைத் தெளிவுபடுத்தியிருக்க வேண்டும். ஆனால், தற்போது வசந்த சமரசிங்கவே அதனைச் செய்து கொண்டிருக்கின்றார்.

எனினும், அவருக்கு இன்னும் இது குறித்த தெளிவு இல்லை. இவ்வாறான சர்ச்சைகளுக்கு மத்தியில் மறுபுறம் மனிதப் படுகொலைகளில் ஈடுபட்டு வரும் பாதாள உலகக் கும்பலும் தலைதூக்கியுள்ளது. நாளாந்தம் துப்பாக்கிச்சூடுகளால் உயிர்கள் பறிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்கள் இடம்பெற்ற போது அப்போதைய அரசு அதற்குப் பொறுப்பு கூற வேண்டும் என வலியுறுத்திய தேசிய மக்கள் சக்தி, பாதாள உலகக் கும்பல்களால் கொல்லப்படும் உயிர்களுக்குப் பொறுப்பு கூற வேண்டும் என நாம் வலியுறுத்துகின்றோம்.

பாதாள உலகக் கும்பல்களுடன் தொடர்புடையவர்கள் மாத்திரமின்றி அப்பாவி மக்களும் இதனால் பாதிக்கப்படுகின்றனர். பொது வெளியில் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் இந்த அழிவு தொடர்பில் அரசில் எவரும் வாய் திறப்பதில்லை.

கடந்த ஆட்சியாளர்களைப் போன்று நாம் ஊடகங்களில் பிரசாரங்களை நடத்தப் போவதில்லை எனக் கூறிய இவர்கள், தற்போது பஸ் சேவையொன்றை மீள ஆரம்பித்து வைப்பதை மேள, தாள வாத்தியங்களுடன் பட்டாசு கொளுத்தி ஒரு பிரம்மாண்ட நிகழ்வாகக் கொண்டாடுகின்றனர்.

மஹிந்த ராஜபக்ஷ அம்பாந்தோட்டை துறைமுகத்தை திறந்து வைத்தபோதோ அல்லது அதிவேக நெடுஞ்சாலையைத் திறந்து வைத்த போதே இந்தளவுக்குப் பிரம்மாண்ட நிகழ்வை நடத்தவில்லை.

தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தத் தவறியவர்கள் பஸ் சேவையை 07

# பிரதமர் பதவியில் மாற்றம் வராது!

## காரணத்தைக் கூறுகின்றது மொட்டுக் கட்சி

"வெளியக அழுத்தம் காரணமாகவே பிரதமர் பதவிக்கு ஹறிணி அமரசூரிய நியமிக்கப்பட்டார். எனவே, அந்தப் பதவியில் மாற்றம் வராது." – என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஊடகப் பேச்சாளர் சஞ்சீவ எதிரிமான்ன ஊடகங்களிடம் மேலும் கூறுகையில்,

"பிரதமர் பதவியில் மாற்றத்தை ஏற்படுத்தும் முடிவுக்கு அநுர அரசு செல்லாது. சில விமர்சனங்கள் முன்வைக்கப் பட்டாலும் மாற்றம் நிகழாது. ஏனெனில் வெளியக அழுத்தத்தின் பிரகாரம் வழங்கப்பட்ட நியமனம் அது." – என்றார்.




# அநுராதபுரம் கெடலாவ வாவிக்குள் இருந்து 7ஆயிரத்துக்கும் அதிக தோட்டாக்கள் மீட்பு!







அநுராதபுரம் கெடலாவ வாவியில் இருந்து தானியங்கி துப்பாக்கிகளுக்குப் பயன்படுத்தப்படும் 7ஆயிரத்துக்கும் மேற்பட்ட தோட்டாக்கள் மீட்கப்பட்டுள்ளன என கலென் பிந்துனுவெவ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வயலில் இருந்து திரும்பிக் கொண்டிருந்த ஒரு விவசாயி ஒருவர் தனது கால்களைக் கழுவுவதற்காக அந்த வாவிக்குச் சென்றபோது நீருக்குள் பல தோட்டாக்கள் இருக்கின்றமையை அவதானித்து பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளார்.

அதற்கமைய உடனடியாகச் செயற்பட்ட பொலிஸார் அந்த் வாவிக்கு சென்று மேற்கொண்ட தேடுதலில் 7ஆயிரத்துக்கும் தோட்டாக்களை மீட்டுள்ளனர்.

அந்த இடத்தில் விசேட பொலிஸ் குழுவினர் மேலதிக சோதனைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## அநுர அணியும்...

(6ஆம் பக்கத் தொடர்ச்சி...)

ஆரம்பித்து வைத்து விட்டு கொண்டாட்டம் நடத்துகின்றனர். தேசிய பாதுகாப்பு தொடர்பில் எமக்கு வகுப்பெடுப்பதாகக் கூறியவருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைச் சமர்ப்பித்திருக்கின்றோம். தைரியமிருந்தால் அதற்கு ஆதரவாக வாக்களிக்குமாறு ஆளுந்தரப்பினருக்குச் சவால் விடுக்கின்றோம்.

சாய்ந்தமருது தாக்குதல்களின் போது கிழக்கு கட்டளைத் தளபதியாக செயற்பட்டவரே தற்போதைய பிரதிப் பாதுகாப்பு அமைச்சர்.

அரசால் அரசு தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்படும் போது எவ்வாறு நீதியை எதிர்பார்க்க முடியும்? ஜனாதிபதி வெளிநாடுகளுக்குச் செல்லும் போது இவரே பதில் பாதுகாப்பு அமைச்சராகச் செயற்படுவார்.

அவ்வாறான சந்தர்ப்பங்களில் விசாரணைகள் பக்கச்சார்பின்றி முன்னெடுக்கப்படும் என்று எவ்வாறு நம்புவது? பதவி விலகாவிட்டால் அவருக்கு வேறொரு அமைச்சை வழங்குவதற்கேனும் ஜனாதிபதி நடவடிக்கை எடுத்திருக்கலாம். ஆனால் அவ்வாறு செய்யவில்லை.

எனவே, நம்பிக்கையில்லாப் பிரேரணையை நிறைவேற்றுவதற்கான சகல முயற்சிகளையும் நாம் முன்னெடுப்போம்." – என்றார்.



# கொழும்பில் நடைபெறவுள்ள நிகழ்வில் இந்திய அரசியல், சினிமா பிரபலங்கள்

இலங்கையில் இடம்பெறவுள்ள தனியார் நிகழ்வொன்றில் கலந்துகொள்ள இந்தியாவின் முக்கிய அரசியல்வாதிகள் மற்றும் சினிமா நட்சத்திரங்கள் வருகை தரவுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சாகத்திய அகாடமி விருது பெற்றவரும், இந்திய நாடாளுமன்ற உறுப்பினருமான கலாநிதி சஷி தரூர், முன்னாள் மத்திய பெண்கள், சிறுவர்கள் மேம்பாடு மற்றும் சிறுபான்மை விவகார அமைச்சர் ஸ்மிருதி இரானி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

அத்துடன், பொலிவுட்திரை நட்சத்திரங்களான, அக்ஷய் குமார் மற்றும் அஜய் தேவ்கன் ஆகியோரும் நிகழ்வில் கலந்து கொள்ளவுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒகஸ்ட் 15 முதல் 17 வரை கொழும்பில் நடைபெறவிருக்கும், Jain International Business Conclave 2025 தனியார் நிகழ்வொன்றிலேயே இவர்கள் கலந்து கொள்ளவுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# நாகர்கோவில் வடக்கு முருகையாவில் மாம்பழம் ஒன்று 10 லட்சம் ரூபா ஏலம்



யாழ்.நாகர்கோவில் வடக்கு முருகையா தேவஸ்தான மாம்பழத் திருவிழாவில் மாம்பழம் ஒன்று 10 லட்சம் ரூபாய்க்கு ஏலம் எடுக்கப்பட்டுள்ள சம்பவம் பதிவாகியுள்ளது.

மேற்படி ஆலயத்தின் கொடியேற்ற திருவிழா கடந்த எட்டாம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாகியது. இதன் ஏழாம் திருவிழாவான மாம்பழத் திருவிழா நேற்று வியாழக்கிழமை இடம்பெற்றது.

இதனைத் தொடர்ந்து இரவு முருகனுக்கும் விநாயகப் பெருமானிற்கும் இடையில் இடம்பெற்ற போட்டியில் உலக சுற்றி முதலில் வலம் வருபவருக்கே மாம்பழம் என தெரிவிக்கப்பட்டதை அடுத்து முருகப் பெருமான் மயில் ஏறி உலகைச் சுற்ற செல்ல விநாயகப் பெருமான் சிவனையும் உமாதேவியாருமான பெற்றோரை வலம் வந்து மாம்பழத்தை பெற்றுக் கொண்டார்.

இச் சரித்திரத்தை பிரதிபலிக்கும் நாடகம் இடம் பெற்றதைத் தொடர்ந்து மாம்பழம் ஏலம் கூறப்பட்டது இதில் பத்தாயிரம் ரூபாய்க்கு மாம்பழம் முதலில் ஏலம் கூறப்பட்டு சில நொடிகளில் 6 லட்சம் ரூபா வரையில் சென்று பின்னர் படிப்படியாக உயர்ந்து சில நிமிடங்களில் 10 லட்சம் ரூபாவிற்கு இறுதியாக ஏலம் விடப்பட்டு உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## வாசிப்போம்; யோசிப்போம்!

ஆயிரம், ஆயிரம் நூல்கள் வரிசையாக அலுமாரிகளிலும், நிலையடுக்குகளிலும் அடுக்கப்பட்டு இருக்கும் ஒரு நூலகம் பற்றி மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் பின்வருமாறு கூறுகிறார்: -

"அந்த நூல்கள் அனைத்துமே, உயிரற்றசடப்பொருள்களாக, வெறும்அச்சிடப்பட்ட கடுதாசிப் பண்டங்களாக காட்சி தந்த போதும், அப்புத்தகங்கள் ஒவ்வொன்றிலும் ஏதோவொரு அதிசயமான இறவாப் பொருள் ஒளிந்து கிடக்கிறது. ஒவ்வொரு நூலிலும் ஒரு படைப்பாளியின் ஆன்மா குடிகொண்டிருக்கின்றது. அந்தப் படைப்பாளி மரணித்து பல ஆண்டுகள் கழிந்திருக்கலாம். ஆயினும் அப்படைப்பாளியின் எண்ணங்கள், சிந்தனைகள், கருத்துக்கள், கோட்பாடுகள், அவன் ஆய்வு செய்து கண்ட உண்மைகள், அவனது கண்டுபிடிப்புகள், வாழ்வானுபவத்தில் இருந்து அவன் பெற்ற தரிசனங்கள் - எல்லாமே எழுத்து வடிவத்தில் நூலாக, அவனது வாழ்வின் சாட்சியமாக, காலத்தால் சாகாத அவனது சிருஷ்டியாக, ஒரு மனிதத்தின் பேருண்மையாக அங்கு இருப்புக் கொண்டு இருந்தது.

"........ வாசிப்பில் வாசகனுக்கும் அந்த நூலைப் படைத்த படைப்பாளிக்கும் மத்தியில் ஒரு விசித்திரமான உறவு நிகழ்கிறது. மானசீகமான ஒரு சந்திப்பு நிகழ்கிறது. அகவயமான ஒரு சங்கமம் நிகழ்கிறது. படைப்பாளியின் எழுத்து உலகில், அவனது கருத்துலகில், அவனது அனுபவக் களத்தில் பிரவேசிக்கும் வாசகன் படைப்பாளியுடன் இணைந்து ஒரு தேடுதலை நடத்துகிறான். ஒரு விசாரணையை நடத்துகிறான். அந்தத் தேடுதலில், அந்த விசாரணையில், படைப்பாளியின் தரிசனத்தை வாசகன் தரிசித்துக் கொள்கிறான். அவனது பார்வை இவனைப் பற்றிக் கொள்கிறது. கருத்துக்கள் கூடு விட்டுக் கூடு பாயும் விந்தை நிகழ்கிறது."

- இப்படி புத்தக வாசிப்புப் பற்றி விவரிக்கின்றார் தத்துவாசிரியர் அன்ரன் பாலசிங்கம்.

யாழ்ப்பாணம் சர்வதேச புத்தகத் திருவிழா இன்று ஆரம்பமாகும் பின்னணியில் வாசிப்பின் இந்த மகத்துவத்தை நாம் நோக்குவது பொருத்தமானதுதான்.

புத்தக வாசிப்பு என்பது மனித வாழ்வியலில் ஒரு முக்கியமான செயற்பாடாக உள்ளது. இது அறிவு வளர்த்தல், பொழுதுபோக்கு மற்றும் தனிப்பட்ட வளர்ச்சிக்கான ஒரு சிறந்த மார்க்கமாகும்.

புத்தக வாசிப்பு மனிதனைப் பூரணமாக்குகின்றது.

அறிவியல் வளர்ச்சியால் அச்சுத் துறையில் புதியதொரு புரட்சி மலர்ந்தது. அதன் மூலம் மக்களின் அறிவுத்திறன், தேடுதல் நாட்டம் போன்றவை மேம்படும் என்று நம்பினோம். ஆனால் அந்த மகிழ்ச்சி நிலையானதாக அமையவில்லை.

மின்னணு ஊடகங்கள் வந்து அச்சு ஊடகத்தின் பயன்பாட்டைக் குறைக்க, வாசிப்புப் பழக்கம் குறைந்து போய்விட்டது. செவி மடுத்து, பார்க்கும் சுலபமான பண்பியல்பை மனம் தேடுகின்றது.

ஆனால், புத்தகங்கள் வாசிப்பதற்கு மட்டுமல்ல, யோசிப்பதற்கும் நம்மை தூண்டுகின்றன.

'நல்ல புத்தகம் நூறு நண்பர்களுக்குச் சமம்' என்பார்கள்.

புத்தக வாசிப்பு அறிவைப் பெருக்குகிறது. மன அழுத்தத்தைக் குறைக்கிறது. நினைவுத்திறனை அதிகரிக்கிறது. பகுத்தாராயும் திறனை மேம்படுத்துகின்றது.

நம் இளைய சமுதாயத்தின் மத்தியில் வாசிப்பைத் தூண்ட வேண்டிய சமயத்தில் யாழ்ப்பாணத்தில் இன்று சர்வதேச புத்தகக் கண்காட்சி ஆரம்பமாகின்றது.



# வவுனியா மாநகரசபையின் குழுநிலை விவாதம் செய்தி சேகரிக்க ஊடகங்களுக்கு மட்டுப்பாடு!

(கி.வசந்தன்)

வவுனியா மாநகரசபையின் ஆதன வரி தொடர்பான குழுநிலை விவாதம் நேற்று இடம்பெற்ற நிலையில் அது பற்றிய செய்தி சேகரிப்பதற்கு ஊடகங்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டிருந்தது.

வவுனியா மாநகரசபையின் ஆதன வரி தொடர்பான விசேட அமர்வு நேற்றுக் காலை இடம்பெற்றது. கடந்த அமர்வில் சபையால் தீர்மானிக்கப்பட்டுள்ள ஆதன வரியைக் குறைக்குமாறு தேசியமக்கள் சக்தி மற்றும் ஏனைய சில உறுப்பினர்கள் கோரிக்கை முன்வைத்தனர்.

இந்நிலையில் அது தொடர்பாக ஆராய்வதற்கு விசேட அமர்வு ஒன்று நடாத்தப்படும் என முதல்வர் தெரிவித்திருந்தார். அதற்கமைய நேற்றைய அமர்வு இடம்பெற்றது.

இதன்போது இந்த விடயத்தை குழுநிலை விவாதமாக நடாத்தவேண்டும் என சபை உறுப்பினர் சு.விஜயகுமார் வேண்டுகோள் விடுத்தார். அதற்கமைய குழுநிலை விவாதமாக நடாத்துவதற்கு சபையால் தீர்மானிக்கப்பட்டது.

இதன்போது குழுநிலை விவாதத்தை செய்தி சேகரிப்பதற்கு ஊடகங்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டது. இதனால் அந்த விவாதம் முடியும் வரை ஊடகவியலாளர்கள் வெளியில் செல்லவேண்டிய நிலை ஏற்பட்டது. குழு நிலை விவாதம் முடிவடைந்த பின்னர் ஊடகங்கள் செய்திசேகரிக்க மீண்டும் அனுமதி வழங்கப்பட்டது.

இதேவேளை இனிவரும் காலங்களில் வவுனியா மாநகரசபையின் அமர்வில் கலந்துகொள்வதற்கு ஊடக அமைச்சில் பதிவுசெய்யப்பட்ட ஊடகங்களுக்கு மாத்திரமே அனுமதி வழங்கப்பட வேண்டும் என சபை உறுப்பினர் பிரேமதாஸ் முன்மொழிந்திருந்தார். சக உறுப்பினர் பர்ஸ்சான் அதனை வழிமொழிந்தார். இதனையடுத்து இனிவரும் காலங்களில் ஊடக அமைச்சில் பதிவுசெய்யப்பட்ட நிறுவனங்களின் அடையாள அட்டை அல்லது ஊடக அமைச்சின் அடையாள அட்டையை வைத்திருக்கும் ஊடகவியலாளர்களுக்கு மாத்திரம் சபை அமர்வுகளில் செய்தி சேகரிப்பதற்கு அனுமதி வழங்கப்படும் என சபை தீர்மானித்துள்ளது.

இதன்போது கருத்து தெரிவித்த சபை முதல்வர் செய்தி சேகரிப்பதற்கு ஊடகங்களுக்கு தனியான பிரத்தியேக இடம்வழங்கவேண்டும். இவ்வாறு உள்ளே எல்லோரும் வரமுடியாது. ஆனால் நாங்கள் இடப்பற்றாக்குறையால் விட்டுள்ளோம். எனவே ஊடகவியலாளர்களுக்கு பிரத்தியேக இடம் ஒதுக்கப்படும் என்றார். அத்துடன் சபை அமர்வுகளை இனிவரும் காலங்களில் நேரலையில் ஒளிபரப்புவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.





# தேசிய தாய்ப்பால் மாதமாக ஓகஸ்டை அறிவிக்க தீர்மானம்



ஓகஸ்ட் மாதத்தைத் தேசிய தாய்ப்பால் மாதமாக அறிவிக்க சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

பத்தரமுல்லையில் உள்ள விருந்தகம் ஒன்றில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றின் போதே, சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ இதனைத் தெரிவித்துள்ளார்.

சர்வதேச தாய்ப்பால் வாரம் ஒவ்வொரு வருடமும் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி முதல் 7 ஆம் திகதி வரை கொண்டாடப்படுகிறது.

இந்த நிலையில் ஒவ்வொரு வருடமும் ஓகஸ்ட் மாதத்தைத் தேசிய தாய்ப்பால் மாதமாக அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ குறிப்பிட்டுள்ளார்.




# யாழ்ப்பாணம் சர்வதேச புத்தகத் திருவிழா – 2025 அணிதிரண்டு புத்தகங்களைக் கொண்டாடுவோம்!

## சிறகுகள் அமையம் அழைப்பு

யாழ்ப்பாணத் தொழில்துறை மன்றத்தினால் (CCIY) ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் இரண்டாவது யாழ்ப்பாண சர்வதேச புத்தகத் திருவிழா – 2025 நிகழ்வை சிறகுகள் அமையம் பெருமையுடன் வரவேற்கிறது.

இன்று ஓகஸ்ட் 15, மற்றும் நாளை 16, நாளை மறுதினம் 17 ஆகிய நாள்களில் யாழ்ப்பாணம் திருவள்ளுவர் பண்பாட்டு மையத்தில் நடைபெறவுள்ள இந்த மிக முக்கியமான நிகழ்வில் கலந்துகொள்ள அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

– இவ்வாறு யாழ்ப்பாணம் சர்வதேச புத்தகத் திருவிழாவை ஒட்டி சிறகுகள் அமையம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு முதல் முறையாக இடம்பெற்றிருந்த இந்தப் புத்தகத் திருவிழா, ஆயிரக்கணக்கான வாசகர்களை ஈர்த்து, யாழ்ப்பாணத்தின் கலாச்சார மற்றும் அறிவுசார் வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றியது.

அந்த வெற்றியைத் தொடர்ந்து, இம்முறையும் நாடு முழுவதுமிருந்து பல முன்னணி புத்தக நிறுவனங்கள் கலந்துகொள்ள உள்ளன. சிறந்த தரம் வாய்ந்த புத்தகங்கள், பல்வேறு தலைப்புகளின் கீழ் சிறப்பு விலைக்கழிவுகளுடன் இங்கு கிடைக்கின்றன. இது, உங்கள் தனிப்பட்ட நூலகத்தை வளர்த்துக்கொள்ளவும், அறிவைப் பெருக்கிக்கொள்ளவும் ஒரு அரிய வாய்ப்பு.

### அறிவுப் பெருக்கத்திற்கான ஓர் அருமையான வாய்ப்பு

புத்தக விற்பனை மட்டுமல்லாமல், இந்தத் திருவிழா பல்வேறு அறிவுசார் மற்றும் கலை நிகழ்வுகளையும் உள்ளடக்கியுள்ளது.

இந்த புத்தகத் திருவிழா, அறிவு மற்றும் கலைத் திறன்களை வளர்ப்பதற்கான ஒரு அற்புதமான தளம். குறிப்பாக, இளைய தலைமுறையினர் மற்றும் குழந்தைகளை வாசிப்பின் இன்பத்தில் ஈடுபடுத்த இது ஒரு சிறந்த வாய்ப்பு.

புத்தகங்கள், நமது சிந்தனைக்கு புதிய திசைகளைத் திறக்கும். உலகைப் புரிந்துகொள்ள உதவும், மேலும் படைப்பாற்றலை ஊக்குவிக்கும். புத்தகக் கண்காட்சியில் கலந்துகொண்டு, வாசிப்பின் மகிமையை உணர்ந்து, உங்கள் அறிவைப் பெருக்கிக்கொள்ளுமாறு அனைத்து மக்களையும், குறிப்பாகக் குழந்தைகளையும் நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்.

### வாசிப்பின் வலிமையை நாம் கொண்டாடுவோம்!

சிறகுகள் அமைய செயற்பாட்டாளர்கள் இந்த மூன்று நாள்களிலும் புத்தகத் திருவிழாவில் படிப்பகம் திட்டத்தினூடாக நூலக வசதிகள் தேவையான கிராமங்கள் மற்றும் பாடசாலைகளுக்கான நூலகங்களை உருவாக்க புத்தக சேகரிப்பு செயற்பாட்டினை மேற்கொள்ளவுள்ளனர்.

உங்களிடம் உள்ள பயன்படுத்தப்பட்ட, நல்ல நிலையில் இருக்கும் புத்தகங்களை நன்கொடையாக வழங்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம். உங்கள் சிறிய பங்களிப்பு, கல்வியை அனைவருக்கும் கிடைக்கச் செய்யும் எங்கள் பயணத்திற்கு பெரும் உந்துதலாக அமையும்.

அனைவரும் வாருங்கள், புத்தகங்களைக் கொண்டாடுவோம்! வாசிப்பின் மூலமாக நமது சமூகத்தை மேலும் மேம்படுத்துவோம்! – என ஊடக அறிக்கையில் குறிப்பிட்டிருந்தனர்.











# இலங்கையை உலகளாவிய புத்தாக்க குறியீட்டில் வலுவாக நிலைநிறுத்த விழிப்புணர்வு நடவடிக்கை

விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சின் கீழ் உள்ள தேசிய புத்தாக்க முகவராண்மையின் வழிகாட்டலின் கீழ், உலகளாவிய புத்தாக்க குறியீட்டுடன் தொடர்புடைய தரவுத் தேவைகள் குறித்தஆலோசனைக் கூட்டம் நேற்று கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் விஞ்ஞான, தொழில்நுட்பம், கல்வி மற்றும் கைத்தொழில் துறைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரச மற்றும் தனியார் துறைகளைச் சேர்ந்த சிரேஸ்ட அதிகாரிகள் பங்கேற்றனர்.

7 முக்கிய கட்டமைப்புகளின் கீழ் 80 குறிகாட்டிகளைப் பயன்படுத்தி நாடுகளின் புத்தாக்க செயல்திறனை அளவிடும் சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட உலகளாவிய புத்தாக்க குறியீட்டு தரவரிசையில் இலங்கையின் நிலையை உயர்த்த அனைத்து தரப்பினர்களையும் ஈடுபடுத்துவதே இந்தக் கூட்டத்தின் நோக்கமாகும்.

நாட்டின் உலகளாவிய போட்டித்தன்மையை மேம்படுத்துதல், முதலீட்டை ஈர்த்தல் மற்றும் அறிவு, தொழில்நுட்பம் மற்றும் தொழில்முனைவோருக்கான மையமாக மாறுதல் ஆகியவற்றில் கவனம் செலுத்தப்பட்டது.

ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு கலாச்சாரத்தைவளர்ப்பது,அரச-தனியார் கூட்டாண்மைகளை வலுப்படுத்துவது மற்றும் தேசிய முன்னுரிமைகளுக்கு ஏற்ப வலுவான புத்தாக்க சுற்றுச்சூழல் கட்டமைப்பை உருவாக்குவது மற்றும் ஆராய்ச்சி, தொழில்நுட்பம், படைப்பாற்றல் மற்றும் புத்தாக்கத்தை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரத்தை நோக்கி நாட்டை வழிநடத்துவது ஆகியவற்றில் அரசாங்கத்தின் உறுதிப்பாட்டை இது பிரதிபலிக்கிறது.தேவையான தரவுகளின் முக்கிய பாதுகாவலர்களான முக்கிய அமைச்சுக்கள், தேசிய நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள் மற்றும் முன்னணி தனியார் துறை பிரதிநிதிகள் பலர் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர். தரவு இடைவெளிகளை சீர்செய்தல், ஒருங்கிணைப்பை மேம்படுத்துதல் மற்றும் நாட்டின் புத்தாக்க செயல்திறன் குறிகாட்டியை ஆதரிப்பதற்காக அனைத்து தரப்பினர்களுக்கும் தெளிவான பங்களிப்பை வரையறுத்தல் ஆகியவற்றில் இந்த திட்டம் கவனம் செலுத்தியுள்ளது.

ஆரம்ப அமர்வைத் தொடர்ந்து, இலங்கையின் புத்தாக்கத் திறன் உலக அரங்கில் துல்லியமாக பிரதிநிதித்துவப்படுத்தப்படுவதை உறுதி செய்து தரவு சேகரிப்பு மற்றும் அறிக்கையிடலுக்கான ஒரு நிலையான தேசிய பொறிமுறையை வரைபடமாக்குவதற்கான ஒரு செயற்பாட்டு அமர்வு நடைபெற்றது . புத்தாக்கம், கொள்கைரீதியில் முன்னுரிமையானது மட்டுமல்லாமல் தேசிய முன்னேற்றத்தின் நடைமுறை இயக்கியாக மாற்றுவதற்கான அரசாங்கத்தின் உறுதிப்பாட்டை இந்த முயற்சி பிரதிபலிக்கிறது என ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.











# சூதாட்ட ஒழுங்குபடுத்தல் அதிகார சபைக்கு அரச நிதி தொடர்பான தெரிவுக்குழு அனுமதி

சூதாட்ட ஒழுங்குபடுத்தல் அதிகார சபையை நிறுவுவதற்கான சட்டமூலத்திற்கு அரச நிதி தொடர்பான தெரிவுக்குழுவின் அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் தலைமையில் அரசாங்க நிதி பற்றிய குழு நாடாளுமன்றத்தில் நேற்று கூடியபோதே இந்த அனுமதி கிடைக்கப்பெற்றது.

இலங்கையில் பந்தயம் கட்டுதல் மற்றும் சூதாட்ட நிறுவனங்களை தரப்படுத்துதல், சமூக தீங்குகளை குறைத்தல், சுற்றுலாத் துறையை மேம்படுத்துதல் மற்றும் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவித்தல் என்பவற்றுக்கான பரந்த நோக்கத்துடன் கூடிய ஒரு சுயாதீன ஒழுங்குமுறை அமைப்பாக சூதாட்ட ஒழுங்குமுறை அதிகார சபையை நிறுவுவதற்கு குறித்த சட்டமூலத்தினூடாக வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.





# கலர் ரி சேர்ட்டுடன் யாழ் மாநகர சபையின் அமர்வில் பங்குபற்றிய பேராசிரியர் கபிலன்

(என்.புவியரசன்)

யாழ்ப்பாணம் மாநகர சபையில் கோல உடையின்றி சபை அமர்வில் பங்கு கொண்ட தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர் பேராசிரியர் கபிலன் சபையில் இருந்து வெளியேற்றப்பட்டார்.

யாழ்ப்பாணம் மாநகர சபையின் மாதக் கூட்டம் நேற்று மாநகர முதல்வர் திருமதி.வி.மதிவதனி தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது மதிய நேரம் சபை அமர்வில் உறுப்பினர் கலர் ரி சேர்ட்டுடன் கலந்து கொண்டமையை சக உறுப்பின்கள் முதல்வரின் கவனத்திற்குக் கொண்டு வந்து இதனை அனுமதிக்க முடியாது என முதல்வரிடம் தெரிவித்தனர்.

இதனையடுத்து ஓர் விடயத்தை முன் வைக்க முயன்ற அந்த உறுப்பினரிடம் கூற வந்த விடயத்தை மட்டும் கூறி ஆடை ஒழுங்கை கவனித்து சபைக்கு பிரசன்னமாகுமாறு முதல்வர் அறிவுறுத்தினார்.

இருந்தபோதும் உறுப்பினர் சபையிடம் மன்னிப்புக்கோரி சபையில் இருந்து வெளியேறினார்.

# தூய்மைப் பணியாளர்கள் போராட்டம்; கைதுசெய்யப்படட 50 பேர் விடுவிப்பு





தூய்மைப் பணியை தனியாருக்கு வழங்கக் கூடாது, பணி நிரந்தரம் தேவை உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி தொடர் போராட்டம் நடத்திய தூய்மை பணியாளர்கள் நள்ளிரவில் கைது செய்யப் பட்ட நிலையில், அவர்களும், அவர்களுக்கு ஆதரவாக போராடியவர்களும் விடுவிக்கப்பட்டனர்.

சென்னை மாநகராட்சி மண்டலம் 5, 6 பகுதிகளுக்கான தூய்மைப் பணி தனியார் நிறுவனத்துக்கு வழங்கப் பட்டுள்ளதை எதிர்த்தும், பணி நிரந்தரம் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தியும் 2 மண்டல தூய்மைப் பணியாளர்களில் என்.யூ.எல்.எம். பிரிவைச் சேர்ந்தவர்கள் 13 நாள்களாக ரிப்பன் மாளிகை முன்பு தொடர் போராட்டம் மேற்கொண்டனர். அவர்களுடன் அரசு தரப்பு மேற்கொண்ட பல சுற்று பேச்சுவார்த்தைகள் தோல்வியில் முடிந்தன.

இதற்கிடையே, போராட்டம் என்ற பெயரில் நடைபாதை, வீதியை மறிப்பதை ஒருபோதும் அனுமதிக்க முடியாது என கருத்து தெரிவித்த உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி அமர்வு, ரிப்பன் மாளிகை முன்பாக போராட்டம் நடத்தி வரும் தூய்மைப் பணியாளர்களை உடனடியாக அங்கிருந்து அப்புறப்படுத்த பொலிஸாருக்கு உத்தரவிட்டது. அதை யடுத்து, போராட்டம் நடத்திய தூய்மைப் பணியாளர்களைக் கலைந்து செல்லுமாறு பொலிஸ் புதன் கிழமை மாலை அறிவுறுத்தியது.

மேலும், நீதிமன்ற உத்தரவைச் சுட்டிக்காட்டி கலைந்து செல்லும்படி போராட்டக்காரர்களுடன்பொலிஸார்பேச்சு வார்த்தை நடத்தினர். ஆனால், யாரும் கலைந்து செல்லவில்லை. அமைச்சர்கள் கே.என்.நேரு, சேகர்பாபு ஆகியோர் போராட்டக்குழுவினருடன்பேச்சுவார்த்தை நடத்தினார்கள். அதிலும் உடன்பாடு எட்டப்படவில்லை. இதையடுத்து, பொலிஸார் கைது நடவடிக்கையில் இறங்கினார்கள். நள்ளிரவு 11.45 மணியளவில் தூய்மைப் பணியாளர்களை பொலிஸார் குண்டுகட்டாகத் தூக்கி கைது செய்தனர். அப்போது பொலிஸாருடன் அவர்கள் வாக்குவாதம் செய்து தள்ளுமுள்ளுவில் ஈடுபட்டதால் பரபரப்பு ஏற்பட்டது.

இதையடுத்து, போராட்டத்தில் ஈடுபட்ட 700 பெண்கள், ஆதரவாக போராடியவர்கள் உள்பட சுமார் 950 பேரை கைது செய்து 30 மாநகர அரசு பஸ்கள் மூலம் சைதாப்பேட்டை, வேளச்சேரி, நீலாங்கரை, தரமணி, தாம்பரம் உள்பட 12 மண்டபம் மற்றும் சமூக நலக்கூடங்களுக்கு பொலிஸார் அழைத்துச் சென்று தங்க வைத்தனர்.

கைது செய்து மண்டபங்களில் தங்க வைக்கப்பட்டிருந்த தூய்மை பணியாளர்களை நேற்று காலை கலைந்து செல்லுமாறு பொலிஸார் அறிவுறுத்தினர். ஆனால், யாரும் கலைந்து செல்லாமல் அங்கேயே இருந்தனர். இதையடுத்து மாலை 5 மணிக்கு மேல் மண்டபம் மற்றும் சமுதாய நலக்கூடங்களில் இருந்து தூய்மை பணியாளர்கள் அனைவரும் விடுவிக்கப்பட்டனர்.

இந்நிலையில், சென்னை மாநகராட்சி ரிப்பன் மாளிகை உள்ளே மற்றும் வெளியே தூய்மைப் பணியாளர்கள் மீண்டும் போராட்டத்தில் ஈடுபட்டுவிடக் கூடாது என்பதற்காக 100 இற்கும் மேற்பட்ட பொலிஸார் குவிக்கப்பட்டு கண்காணிப்பு அதிகரிக்கப்பட்டது. ரிப்பன் மாளிகை உள்ளே வரும் அனைத்து வாகனங்களையும் சோதனை செய்த பின்னரே பொலிஸார் அனுமதிக்கின்றனர்.

இதனிடையே, முதல்வர் ஸ்டாலின் தனது சமூக வலைதளப் பதிவில்,

“நாளும் நம் நகரங்கள் இயங்க நள்ளிரவு, புயல், மழை, வெள்ளம் என எந்நேரமும் ஓயாமல் உழைக்கும் தூய்மைப் பணியாளர்களின் மாண்பினை நமது திராவிட மொடல் அரசு ஒருபோதும் விட்டுக் கொடுக்காது.” என்று குறிப்பிட்டுள்ளார்.

# காஷ்மீரில் தொடர் வெள்ளத்தால் 32 பேர் உயிரிழப்பு, பலர் மாயம்





இந்தியாவின் - காஷ்மீரில் திடீரென பெய்த கனமழையாலட ஏற்பட்ட வெள்ளத்தில் குறைந்தது 12 பேர் உயிரிழந்திருக்கலாம் என்றும் மேலும் பலர் இடிபாடுகளில் சிக்கியிருக்கலாம் எனவும் அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

காஷ்மீரின் முக்கிய புனித யாத்திரைப் பாதையில் அமைந்துள்ள கிஷ்த்வார் மாவட்டத்தின் சசோதி நகரில் இந்தப் பேரழிவு நிகழ்ந்துள்ளதாக கூறப்படுகிறது.

இமயமலை அமைந்துள்ள மாநிலமான உத்தரகாண்டில் ஒரு கிராமம் முழுவதையும் பலத்த வெள்ளம் மற்றும் மண்சரிவு சூழ்ந்த ஒரு வாரத்திற்குப் பிறகு இந்த அனர்த்தம் நிகழ்ந்துள்ளது.

இந்நிலையில் கிராமத்திற்குள் வெள்ளம் புகுந்ததால், பக்தர்கள் அச்சம் கொள்ளும் காணொலிகளை தொலைக்காட்சிகள் வெளிப்படுத்தியுள்ளன.

இந்திய வானிலை ஆய்வுத் துறையின் கூற்றுப்படி, இது ஒரு மேக வெடிப்பு என்றும் இதன்காரணமாக ஒரு மணி நேரத்தில் 100 மில்லி மீற்றருக்கும் அதிகமான மழை பெய்யும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# பசுபிக் பெருங்கடலில் சுனாமி ஏற்பட வாய்ப்பு

## விஞ்ஞானிகள் எச்சரிகை

அமெரிக்க பசுபிக் பெருங்கடலில் பாரிய அளவிலான சுனாமி பேரலை ஏற்பட வாய்ப்புள்ளதாக எச்சரிக்கை விடுக் கப்பட்டுள்ளது.

அடுத்த 50 ஆண்டுகளுக்குள் 8 மெக்னிடியூட் அல்லது அதற்கு அதிக அளவிலான நில அதிர்வுகள் ஏற்பட 15 சத வீதம் வாய்ப்புள்ளதாக விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

சுமார் 1000 அடி வரை உயர்வான சுனாமி பேரலை அலைகள் ஏற்பட வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இந்த நிலைமைகள் பாரிய அழிவை ஏற்படுத்தும் எனவும் குறிப்பிடப்படுகிறது.

ஒரு பெரிய நிலஅதிர்வு 30,000 க்கும் மேற்பட்ட இறப் புகளையும், 170,000 க்கும் மேற்பட்ட கட்டமைப்புக ளையும் சேதப்படுத்தும் என விஞ்ஞானிகள் கூறுகின்ற னர்.

81 பில்லியன் அமெரிக்க டொலருக்கும் அதிகமான பொருளாதார இழப்புகளையும் ஏற்படுத்தக்கூடும் என்று ஆய்வுகள் எச்சரிக்கின்றன.

# இத்தாலியில் படகு கவிழ்ந்து விபத்து; 20 பேர் பலி; 17 பேரை காணவில்லை



இத்தாலியில், ஆபிரிக்க அகதிகளை ஏற்றிச் சென்ற படகு கவிழ்ந்ததில் 20 பேர் உயிரிழந்துள்ளனர். 17 பேரை காண வில்லையெனத் தெரிவிக்கப்பட்டுள் ளது.

இந்த விபத்தில், ஒன்றரை வயதுக் குழந்தை உட்பட 60 பேர் பத்திரமாக மீட்கப்பட்டதுடன், காணாமல் போனோ ரைத் தேடும் பணி நடைபெற்று வருவ தாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இத்தாலியின், லேம்பெடுசா தீவு அருகே, ஆபிரிக்க அகதிகள் 97 பேரை ஏற்றிச் சென்ற படகு கவிழ்ந்ததில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாக வெளி நாட்டு ஊடகங்கள் செய்தி வெளி யிட்டுள்ளன.

ஐரோப்பிய நாடான இத்தாலியையும், வட ஆபிரிக்க நாடுகளையும் மத்திய தரைக்கடல் பகுதி இணைக்கிறது.

இந்த கடல் பகுதி வழியாக ஆபத் தான படகு பயணங்கள் மூலம், ஆண்டு தோறும் ஆயிரக்கணக்கான ஆபிரிக்க மக்கள் அகதிகளாக இத்தாலிக்கு பயணிக் கின்றனர்.

இந்த ஆண்டில் 38,263 பேர் இத்தாலி கரையை அடைந்துள்ளனர் எனவும், இதுவரை 675 பேர் படகு கவிழ்ந்த விபத்தில் உயிரிழந்துள்ள னர் என்றும் வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

# இன்றைய ராசி பலன்கள் -15.08.2025




ஆன்மீக ஈடுபாடு உங்களுக்கு ஆறுதலை பெற்றுத் தரும். புனித யாத்திரை ஒன்றை மேற்கொள்வீர்கள். அது உங்களுக்கு திருப்தி உணர்வை அளிக்கும்.

நீங்கள் மிகவும் சிறப்பாக பணியாற்றுவீர்கள். உங்கள் முயற்சிக்கு அங்கீகாரமும் பாரட்டும் கிடைக்கும்.

இன்று காதலுக்கு உகந்த நாள். உங்கள் துணையுடன் அன்பாக இருப்பீர்கள். உங்கள் உறவினர்களிடம் கலந்தாலோசித்து உங்கள் திருமணத்துக் காகத் திட்டமிடலாம்.

நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். நீங்கள் பணத்தை சேமிக்கும் நிலையில் இருப்பீர்கள்.

இன்று ஆரோக்கியத்தில் எந்தப் பிரச்சனையும் காணப்படாது. இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்




இன்று சுறுசுறுப்பாக காணப்படுவீர்கள். வெற்றி காண கடினமாக உழைக்க வேண்டும். சிறந்த தகவல் தொடர்பாடல் மூலம் நீங்கள் நல்ல பலனைப் பெறலாம்.

பணியிடச் சூழல் இன்று சிறப்பாக இருக்கும். உங்கள் பேச்சின் மூலம் சிறந்த வளர்ச்சி பெறுவீர்கள். இது உங்களுக்கு வழிகாட்ட உதவும்.

இன்று கருத்து வேறுபாடு ஏற்பட வாய்ப்புள்ளது என்பதால் காதலுக்கு உகந்த நாள் அல்ல. காதல் பாதிக்காமல் இருக்கவும் நன்கு வளரவும் புரிந்துணர்வு அவசியம்.

வரவு செலவு இரண்டும் இணைந்து காணப்படும். வருவதைக் கொண்டு நிர்வகிக்க வேண்டும்.

பதற்றம் காரணமாக தோள் வலி மற்றும் எரிச்சல் காணப்படும். மருத்துவ பரிசோதனை மேற்கொள்வது சிறந்தது.




இன்று சாதாரணமான நாள். நீங்கள் பெரியவர்களைக் கூட மகிழ்விக்கும் இனிமையான வார்த்தைகளை பேசுவீர்கள். இறை மந்திரங்கள் சொல்வது இசை கேட்பது மன ஆறுதலை அளிக்கும்.

பணி நிமித்தமான பயணம் காணப்படுகின்றது. உங்களுக்கு புதிய பணிகள் கொடுக்கப்படும். அது சவால்கள் நிறைந்ததாக இருக்கும்.

உங்கள் தந்தையுடன் நல்லுறவு பராமரிப்பீர்கள். குடும்ப அங்கத்தினர்களின் நல்லாதரவு பெறுவீர்கள். இன்று காதலர்களுக்கு உகந்த நாள் அல்ல.

நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்கும். இன்று கணிசமான தொகை பராமரிப்பீர்கள்.

ஆரோக்கியம் பொதுவாக சிறப்பாக இருக்கும். இன்று நீங்கள் சிறந்த ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள்.




இன்று மிகவும் சிறப்பான நாளாக காணப்படாது. இன்று உங்கள் செயல்களை சிறப்பாக திட்டமிட வேண்டும். எந்த செயலையும் செய்வதற்கு முன் நன்கு யோசிக்க வேண்டும். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும். எதற்கும் உணர்ச்சி வசப்படாதீர்கள்.

பணியிடச் சூழல் மகிழ்ச்சிகரமாக இருக்காது. நீங்கள் அதிக பணிகளை சுமக்க நேரும். இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.

உங்கள் காதலை வெளிபடுத்த இது உகந்த நாள் அல்ல. உங்கள் துணையுடன் இன்று அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

இன்று நிதி வளர்ச்சி மகிழ்ச்சிகரமாக காணப்படாது. இன்று அதிக செலவுகள் காணப்படும். இது உங்களுக்கு கவலை அளிக்கும்.

ஆரோக்கியத்தைப் பொறுத்தவரை மிகவும் கவனம் தேவை. கால் வலி மற்றும் பதற்றம் சம்பந்தமான பிரச்சினைகளை எதிர்கொள்வீர்கள்.




உங்கள் செயல்களை சீராக மேற்கொள்வதில் நீங்கள் வெற்றி பெறுவீர்கள். இன்று முக்கிய முடிவுகள் எடுப்பது நல்லது.

உங்கள் பணிகள் பாராட்டைப் பெறும். உங்கள் பணிகளை நீங்கள் அனுசரித்து கவனமாக மேற்கொள்வீர்கள்.

உங்கள் துணையுடன் சிறப்பான நேரத்தை பகிர்ந்து கொள்வீர்கள். உங்கள் காதலருடன் உங்கள் வாழ்கைக்கு திட்டமிடும் நாள்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். நீங்கள் பணத்தை சேமிக்க இயலும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்களிடம் நம்பிக்கை எண்ணம் காணப்படும். இது உங்கள் ஆரோக்கியத்தில் பிரதி பலிக்கும்.




வெற்றி பெறுவதற்கான தைரியமும் உறுதியும் உங்களிடம் காணப்படும். உங்கள் விருப்பங்கள் நிறைவேறும்.

உங்கள் பணிகளை திறமையுடன் ஆற்றுவீர்கள். உங்கள் சக பணியாளர்களுடன் நல்லுறவு பராமரிப்பீர்கள்.

காதலில் அன்பு மிகுந்து காணப்படும். உங்கள் துணையுடன் உங்கள் எதிர் கால வாழ்க்கைக்கு திட்டமிட உகந்த நாள்.

இன்று பணப்புழக்கம் சிறப்பாக இருக்கும். உங்கள் கடின உழைப்பிற்கு நீங்கள் ஊக்கத் தொகை பெறுவீர்கள்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். ஆரோக்கியத்தில் எந்தக் குறைபாடும் இருக்காது.




இன்றைய நாள் சராசரிக்கும் அதிகமான பலன்களை அளிக்கும். உங்கள் புத்திசாலித்தனத்தை நன்கு பயன்படுத்துவீர்கள். உங்கள் தரத்தை மேம்படுத்தவும் வெற்றி பெறவும் நீங்கள் முயற்சி எடுக்கலாம்.

பணி நிமித்தமான பயணம் காணப்படுகின்றது. நீங்கள் உங்கள் பணியில் மும்முரமாக ஈடுபட்டிருப்பீர்கள்.

உங்கள் துணையை சந்தித்து உங்கள் உறவை மேம்படுத்த முயல்வீர்கள். உங்கள் துணையுடன் வெளிப்படையாக இனிமையான வார்த்தைகளை பேசுவது சிறந்தது.

நீங்கள் சம்பாதித்த பணத்தை ஆன்மீகக் காரியங்களுக்காக பயன்படுத்துவீர்கள். இதன் மூலம் மனதிருப்தியை அடைவீர்கள்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். ஆரோக்கியத்தில் எந்தக் குறைபாடும் இருக்காது.




இன்று மந்தமான நாளாக இருக்கும். உங்கள் உணர்ச்சி மற்றும் உணர்வுகளை கட்டுப்படுத்த வேண்டும். பொறுமையுடனும் நம்பிக்கையுடனும் இருக்க வேண்டும்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். உங்கள் பணிகளை கவனமாக முடிக்க நீங்கள் சில சௌகரியங்களை விட்டுக் கொடுக்க நேரும்.

இன்று காதலுக்கு உகந்த நாள் அல்ல. உங்கள் தாயுடன் கருத்து வேற்றுமை ஏற்படலாம்.

பணப்புழக்கம் போதிய அளவு காணப்படாது. நீங்கள் தேவையற்ற செலவுகளை செய்வீர்கள். இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.

இன்று சில அசௌகரியங்கள் காணப்படும். இது உங்கள் ஆரோக்கியத்தை பாதிக்கும். தூக்கமின்மை பாதிப்பு அல்லது தோல் பிரச்சினை ஏற்பட வாய்ப்புள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் -15.08.2025




எதிர்பாராத வகையில் நன்மை கிடைபதற்கான வாய்ப்புள்ள நாள். இன்றைய சூழ்நிலைகள் உங்களுக்கு சாதகமாக இருக்கும்.

இன்று பணியில் உங்கள் சக பணியாளர்களின் ஆதரவைப் பெறுவீர்கள். நீங்கள் மிகவும் கவனமுடன் பணியாற்றுவீர்கள்.

இன்று உங்கள் காதலருடன் திருமணம் நடக்க வாய்ப்புள்ளது. என்றாலும் சரியான பாதையில் முயற்சிக்க வேண்டும்.

இன்று பணப்புழக்கம் அதிகமாக இருக்கும். நீங்கள் பணத்தை சேமிப்பீர்கள்.

இன்று முழுவதும் நீங்கள் ஆரோக்கியமாக இருப்பீர்கள்.




இன்று சராசரிக்கும் அதிகமான பலன்கள் கிடைக்கும். ஆன்மீக ஈடுபாட்டின் மூலம் நீங்கள் மன திருப்தி பெற இயலும்.

உங்களின் பணிகள் எந்த தடையும் இல்லாமல் நடக்க இன்று நீங்கள் பொறுமையை இழக்காமல் புத்தி சாலித்தனத்துடன் செயல் பட வேண்டியது அவசியம்.

உங்கள் துணையுடன் இனிமையான வார்த்தைகளை பகிர்ந்து கொள்வீர்கள். இது உங்களுக்கு மகிழ்ச்சியான அனுபவமாக இருக்கும்.

பங்கு வர்த்தகம் போன்ற புதிய முதலீடுகள் திருப்தி அளிக்கும். இவற்றின் மூலம் திருப்தியான பண வரவு காணப்படும்.

இன்று நீங்கள் சிறந்த ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள்.




இன்று உங்களுக்கு சுமாரான பலன்கள் கிடைக்கும். உங்கள் மனதில் தேவையற்ற குழப்பங்கள் காணப்படும். இன்று அனுசரித்துப் போவது நல்லது. எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

நீங்கள் இன்று சிறப்பாக பணியாற்றுவீர்கள். என்றாலும் சக பணியாளர்களுடன் வாக்குவாதங்களில் ஈடுபடுவதை தவிர்ப்பது நல்லது.

உங்கள் காதலருடன் இனிமையான தருணமாக காணப்படாது. வாக்குவாதம் எழ வாய்ப்புள்ளது.

நிதி நிலைமையில் மிதமான வளர்ச்சி காணப்படும். இன்று வரவு செலவு இரண்டும் இணைந்து காணப்படும்.

ஆரோக்கியத்தில் எந்தப் பிரச்சினையும் இருக்காது. நீங்கள் சிறந்த ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள்.




இன்று சற்று மந்தமான நாள். எந்த முடிவையும் எடுப்பதற்கு முன் யோசிக்க வேண்டும். பலன்கள் நீங்கள் எதிர்பார்த்தபடி காணப்படாது. நீங்கள் பொறுமையாக இருக்க வேண்டும்.

உங்கள் பணிகளை மேற்கொள்வதில் தாமதம் காணப்படும். அதிகப் பணிகள் மற்றும் கவனக் குறைவே இதற்குக் காரணம்.

உங்கள் கருத்துக்களை பகிர்ந்து கொள்வதை கடினமாக உணர்வீர்கள். உங்கள் காதலருடன் சண்டை ஏற்பட வாய்ப்புள்ளது. உங்கள் துணையிடம் வெளிப்படையாக அணுகுங்கள்.

இன்று பண விரயம் காணப்படும். தேவையற்ற செலவுகள் செய்ய நேரும்.இது உங்களுக்கு கவலை அளிக்கும்.

குழந்தைகளின் ஆரோக்கியம் கவலை அளிக்கும். அவர்களின் ஆரோக்கியத்துக்காகப் பணம் செலவு செய்ய நேரும்.



# அஸ்வெசும நலன்புரி கொடுப்பனவு இன்று முதல் வைப்பிலிடப்படும்

அஸ்வெசும நலன்புரி கொடுப்பனவுகள் இன்று முதல் பயனாளிகளின் வங்கிக் கணக்குகளுக்கு வைப்பிலிடப்படுமென நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

இவ்வாறு, 1,421,745 பயனாளிகளுக்கு 11,276 மில்லியன் ரூபா வங்கிகளுக்கு வைப்பிலிடப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட பயனாளிகள் ஓகஸ்ட் 15 ஆம் திகதி முதல் பணத்தைப் பெற முடியும் என்று நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது.